திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவு சொஸைட்டியில் 100-க்கு 80 பங்கு சரிவர வேலை செய்யவில்லை. இது சம்பந்தப்பட்ட சொஸைட்டி வேலை செய்யாமல் இருக்கக் காரணம் என்ன—அந்தக் காலக் கெடுவரையில்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதிலே, அவர்கள் மீது கூறி இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள், ரசீது பொறுத்தமாகக் கொடுக்கப்படவில்லை; கௌண்டர்ஃபாயிலுக்கும் கொடுக்கப் பட்டதற்கும் சரிவரவில்லை. லோன் ரெக்கவரி அந்தப் புத்தகத்தில் லெட்ஜரில் குறிப்பிடப்படவில்லை; சாதாரண வெள்ளைக் காகிதத் தில் ரசீது போட்டு கொடுத்தார் என்ற மூன்று குற்றசாட்டுகள் தான் என்னிடத்திலே இருக்கிறது. அதற்குப் பிறகு விசாரணை செய்து, பிறகு பொது உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி விசாரணை செய்து அதற்குப் பிறகுதான் புதிய நிர்வாக குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒலகடத்துக்கு ஆரம்பச் சுகாதார நிலையம்

*78 வினா.—**திரு. ஏ. எம். ராஜா:** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பவானி வட்டத்திலுள்ள, ஒலகடம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் (Primary health centre) வேண்டு மென்று பொதுமக்களிடமிருந்து கடந்த ஆண்டில் கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, ஒலகடம் கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள மக்களுக்கு வைத்திய வசதி தேவையாக இருந்தால், 10 மைல்களுக்கு அப்பால் வர வேண்டியுள்ளது. ஆகவே, ஒலகடம் கிராமத்தில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே இந்த பிளாக்கில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. இரண் டாவது பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

இராயப்பேட்டை மருத்துவ மனை

*79 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க இராயப்பேட்டை மருத்துவ மனையை விரிவு படுத்திக் கட்டடம் ஏதேனும் கட்டப்பட்டு வருகிறதா?